National University of Singapore
Source: *Tamil Murasu*, p2
Date: 18 June 2016

தேசிய பல்கலைக்கழகம் தொடங்கியது; இதர நான்கு பல்கலைக்கழகங்களும் தொடங்கும்

வாழ்நாள் கல்விக்கு வாய்ப்பு

சிங்கப்பூரில் வேலை பார்க்கின்ற ஊழியர்கள் வாழ்நாள் முழுவதும் தேர்ச்சி, திறமை, அறிவைக் கற்றுக்கொண்டு மேலும்மேலும் முன்னேறுவதற்கு வசதியாக ஐந்து தன்னாட்சிப் பல்கலைக் கழகங்களும் வாழ்நாள்கல்வி நிலையங்களை ஏற்படுத்த இருக்கின்றன.

இவற்றில் முதலாவதாக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யுஎஸ்), தொடர் மற்றும் வாழ்நாள்கல்வி நிலையத்தைத் தொடங்கியது. தற்காலிகக் கல்வி அமைச்சர் (உயர்கல்வி, திறன்கள்) ஓங் யி காங் நேற்று புதிய கல்வி நிலையத்தைத் திறந்து வைத்தார்.

சிங்கப்பூரின் கல்வி முறையானது, மக்கள் தங்களுக்கு நாட்டமான துறைகளில் தேர்ச்சிகளைப் பெறுவதற்காக இங்குள்ள உயர்கல்வி நிலையங்களில் பல வழிகளையும் தொடர்ந்து திறந்து விட்டு வருகிறது என்றும் ஐந்து தன்னாட்சிப் பல்கலைக்கழகங்களும் வாழ்நாள்கல்வியைப் பலப்படுத்த புதிய கல்வி நிலையங்களைத் திறக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

> “சிங்கப்பூரில் ஐந்து தன்னாட்சிப் பல்கலைக்கழகங்களும் வாழ்நாள் கல்வியைப் பலப்படுத்த புதிய கல்வி நிலையங்களைத் திறக்கும்.
>
> **தற்காலிகக் கல்வி அமைச்சர் (உயர்கல்வி, திறன்கள்) ஓங் யி காங்**

“புதிய வழிகளைக் காண பலரும் வழிவழியான துறைகளை விட்டுவிட்டு புதிய துறைகளில் ஒருமித்த கவனம் செலுத்துகிறார்கள். சிங்கப்பூரர்களை எதிர்காலத்திற்கு ஆயத்தப்படுத்த தேர்ச்சிகளை அடிப்படையாகக்கொண்ட பயிற்சிப் படிப்புகளுக்கான வாய்ப்புகளை நாம் வழங்க வேண்டும்,” என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

என்யுஎஸ்–இல் $12 மில்லியன் செலவில் திறக்கப்பட்டுள்ள புதிய கல்வி நிலையத்தில் படிப்போருக்கு இளநிலை பட்டம், பட்டயச் சான்றிதழ் படிப்புகள், இளநிலை, முதுநிலை பட்டப் படிப்புகள், குறுகிய கால படிப்புகள், நிர்வாகப் படிப்புகள் ஆகியவற்றைப் பயிலலாம்.

எல்லா பாடத் திட்டங்களையும் இந்தப் பல்கலைக்கழகத்தின் துறைகளும் பள்ளிகளும் வடிவமைக்கும். அரசாங்க அமைப்புகள், முதலாளிகளுடன் அணுக்கமாகக் கலந்தாலோசித்து அது இதனைச் செய்யும்.

படிப்புகள், சந்தைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதாகவும் தொழில்துறைத் தேவைகளை ஈடு செய்வதாகவும் இருப்பதை என்யுஎஸ் இதன் மூலம் உறுதிப்படுத்தும்.

வேலை அனுபவம், கற்ற கல்வி ஆகியவற்றை கருத்தில்கொண்டு இந்தப் படிப்புகளில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

மாணவர்கள் ஏட்டுக் கல்வி அடிப்படையில் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்று என்யுஎஸ் தெரிவித்துள்ளது. “இந்தப் புதிய வாழ்நாள் கல்வி நிலையம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்துக்கு ஒரு முக்கியமான புதிய இலக்காக இருக்கிறது. இது தேசிய அளவில் இடம்பெறும் ஸ்கில்ஸ்ஃபியூச்சர் இயக்கத்திற்கு தீவிரமாக ஆதரவு தரும்,” என்று பல்கலைக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் டான் சோர் சுவான் தெரிவித்தார்.

“பெரியவர்கள் என்யுஎஸ்– இடமிருந்து புதிய அறிவையும் தேர்ச்சிகளையும் பெறுவதற்கு வகை செய்யும் வெவ்வேறான வாய்ப்புகளைப் புதிய தொடர், வாழ்நாள் கல்வி நிலையம் வழங்கும்.

“இதன்மூலம் சிங்கப்பூர் நிறுவனங்களும் தொழில்துறைகளும் தொழில்துறைக்கு ஏற்ற நிபுணத்துவ மேம்பாடுகளுடன் போட்டித் திறன்மிக்கவையாகத் திகழ முடியும். தேசிய மனிதவள தேவைகளையும் நிறைவேற்ற முடியும்,” என்று அவர் தெரிவித்தார்.

என்யுஎஸ்–இல் தொடங்கப்பட்டிருக்கும் புதிய கல்வி நிலையத்துக்கு தொழில்துறை வல்லுநரும் கணினி வர்த்தகத் துறை ஆலோசகருமான பேராசிரியர் வெய்குவோக் கீ தலைவராக இருப்பார்.

“கற்பது என்பது பள்ளிக்கூடத்துடன் முடிவடைந்துவிடவில்லை. கல்வியில் பல்கலைக்கழகத்தின் பணி, பட்டமளிப்பதுடன் நின்றுவிடுவதில்லை,” என்று அமைச்சர் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.